கடலூரில் முதல்வர் - 45 ஆயிரம் பேருக்கு நலத் திட்ட உதவிகள்:

முதல் பக்கத் தொடர்ச்சி...

முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார்!

ரூ.72. 67 கோடியில், 9 கிராம ஊராட்சி செயலகக் கட்டடங்கள், 61 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 4 சமுதாயக் கூடங்கள் முதலிய 225 முடிவுற்றத் திட்டப் பணிகள்; வணிக வரி பதிவுத்துறை சார்பில் ரூ.11 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிதம்பரம் ஒருங்கிணைந்த சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் ; பொது நூலகத் துறை சார்பில் 10 பொது நூலகக் கட்டடங்கள், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் ரூ.21.28 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சி.என். பாளையம் அரசு கால்நடை மருந்தகக் கட்டடம், சேத்தியாத் தோப்பு பால் பண்ணை முதலிய 8 புதிய திட்டப் பணிகள் முதலியவை திறந்து வைக்கப்பட்டன.

ரூ.479 கோடியில் குடிநீர் வழங்கும் திட்டம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், ரூ.479 கோடி மதிப்பீட்டில் குறிஞ்சிப்பாடி, வடலூர், திட்டக்குடி முதலிய பகுதிகளைச் சேர்ந்த 6,68,000 பொதுமக்களுக்கு தினமும் 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

560 அடுக்குமாடி குடியிருப்புகள் - குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் திறப்பு!

ரூ.57.96 கோடியில் கட்டப்பட்டுள்ள 560 அடுக்குமாடி குடியிருப்புகள், ரூ.4.82 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் ஆகியவை திறந்து வைக்கப்பட்டன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கடலூர் மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது, இந்த - கடலூர் மஞ்சக்குப்பத்தில் நடைபெறும் விழாவில் ரூ.384.41 கோடி மதிப்பீட்டிலான 178 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.704.89 கோடி மதிப்பீட்டிலான 602 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைப்பதுடன், ரூ.386.92 கோடி மதிப்பீட்டில் 44,689 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிப் பேருரையாற்றினார்கள்.

பெற்றோரைக் கொண்டாடுவோம்!' மண்டல மாநாட்டில் சிறப்புரை!

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள், இன்று (22.2.2025 - சனிக்கிழமை) வேப்பூர் வட்டம், திருப்பெயர் பகுதியில் பெற்றோர் - ஆசிரியர் கழகத்தின் சார்பில் நடைபெறவுள்ள "பெற்றோரைக் கொண்டாடுவோம்" மண்டல மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

'பெற்றோரைக் கொண்டாடுவோம்': மண்டல மாநாடு!

முதல் பக்கத் தொடர்ச்சி...

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றுகிறார்.

234/77 கள ஆய்வு காணொலி, தமிழ்நாடு பெற்றோர் - ஆசிரியர் கழக செயலி, விழா மலர் ஆகியவற்றை வெளியிட்டு அரசுப் பள்ளிக் கட்டிடங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றுகிறார்.

நிகழ்ச்சிக்கு உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் எம்.கே.விஷ்ணு பிரசாத் எம்.பி., எம்.ஆர். இராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் ணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர்,

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு.மா. ஆர்த்தி, அரசு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் ஆர்.சுதன், ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் செயலர் முனைவர் வி.சி.இராமேஸ்வர முருகன், தனியார் பள்ளிகள் இயக்கக இயக்குநர் முனைவர் முத்து பழனிசாமி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் திருமதி த.உமா, அரசுத் தேர்வுகள் இயக்கக இயக்குநர் திருமதி ந.லதா, ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் முனைவர் சி.உஷாராணி, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் எஸ்.நாகராஜ முருகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உறுப்பினர் செயலர் முனைவர் பெ.குப்புசாமி, ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் சா.சேதுராமவர்மா, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கூடுதல் மாநில திட்ட இயக்குநர் திருமதி எஸ்.உமா, தொடக்கக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தமிழ்நாடு மாநில பெற்றோர் - ஆசிரியர் கழக மாநிலத் துணைத் தலைவர் என்.கே.ஆர். சூரியகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேற்கண்ட 7 மாவட்டங்களைச் சேர்ந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு, விழாவினைச் சிறப்பிக்குமாறு, தமிழ்நாடு மாநில பெற்றோர் - ஆசிரியர் கழக மாநில துணைத் தலைவர் முத்துக்குமார் அழைப்பு விடுத்துள்ளார்.

பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் நன்றி கூறுகிறார்.

ஒன்றியத்தின் முதன்மை முதல்வர்

அன்று மாநகரத்தின் தந்தை - இன்று மாநிலத்தின் தந்தை!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நன்றி – பாராட்டு!

சென்னை, பிப்.22 -

வட சென்னை பகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகள் ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசும்போது, "அன்று மாநகரத்தின் தந்தை - இன்று மாநிலத்தின் தந்தை" என்று பெருமிதத்துடன் நன்றி பாராட்டினார்.

விழாவில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசியதாவது:-

'நன்றி' - அது மூன்று எழுத்துகளில் அடங்குகின்ற சொல் அல்ல, வள்ளுவர் பெருந்தகை சொன்னதைப்போல,

"நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என்றார்.

வாக்களித்த மக்களுடைய வாழ்வாதாரம் சிறக்க, நன்றியோடு செயல்படுகின்ற ஒன்றியத்தின் முதன்மை முதல்வர் அவர்களை நன்றியோடு நன்றி பாராட்ட அழைக்கின்றோம்.

நம் முதல்வர் அவர்கள் தான், முதன் முதலில் நேரிடையாக மக்களால் வாக்களிக்கப்பட்டு, முதல் மேயராக சென்னைக்கு தேர்வு செய்யப்பட்ட முதல்வர். அப்போது அவரை மாநகரத்தின் தந்தை என்று அழைத்தோம்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நம் முதல்வர் அவர்களை, அன்றைக்கு மாநக ரத்தின் தந்தையாக இருந்தவர், இன்றைக்கு மாநிலத்தின் தந்தையாக உயர்ந்து நின்றுக்கொண்டிருக்கின்றார்.

கடந்த காலங்களில் வட சென்னை மாற்றாந் தாய் மனப்பான்மையோடு பத்தாண்டுகள் ஒரங்கட்டப்பட்டிருந்தது. இந்த வட சென்னையை இன்றைக்கு தாய் உள்ளத்தோடு தாயுமானவராக வாரி அணைக்கின்ற முதல்வர் நம் முதல்வர் அவர்கள்.

பாடல் வரிகளிலே சொல்வார்கள், 'தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு' என்று. ஆனால் தெய்வமாக இருந்து வீடுகளை தந்து கொண்டிருக்கின்ற முதல்வர் அவர்கள் இன்றைக்கு நம் மேடையில் இருந்து கொண்டிருக்கிறார்.

நம் முதல்வர் வாழ் வாங்கு வாழ வேண்டும். எல்லா புகழும் எய்த வேண்டும், பல்லாண்டு காலம் வாழ வேண்டும், எல்லாப் புகழும் அவரை அடைய வேண்டும், நீண்ட நெடுங்காலம் பல்லாண்டு, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு நோய் நொடி இல்லாமல் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ இயற்கையை வேண்டுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார்.

'சுய நினைவற்றவரைப் போல் பிதற்றித் திரிகிறார்' பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டனம்!

சென்னை, பிப்.22 -

சுயநினைவற்றவரைப்போல் பிதற்றித் திரிகிறார் தமிழ்நாட்டு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:–

திமுக அரசு சொல்வதை செய்யும் அரசு, சொல்வதற்கு மேலாகவும் மக்கள் சேவை செய்யும் அரசு, திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் முதலமைச்சர் 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' அவர்கள் மக்களுக்கு தெரிவித்ததைப்போல், "நான் ஓட்டு போட்டவருக்கு மட்டும் முதலமைச்சரல்ல, ஓட்டு போடாதவர்களுக்கும் நானே முதலமைச்சர்", அந்த வகையில் நாம் ஏன் திமுக அரசுக்கு ஓட்டுப் போட தவறிவிட்டோம் என்று சிந்திக்கின்ற வகையில் இந்த திராவிட மாடல் ஆட்சி அமையும் என்று சூளுரைத்தார். கழக ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து இதுநாள் வரை 90% மேற்பட்ட வாக்குறுதிகள் நிறை வேற்றப்பட்டுள்ளது.

அவற்றில் சில, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞரின் கனவு இல்லத்திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும்48, மக்களுடன் முதல்வர், தொழில்துறை 4.0 திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், இல்லம் தேடி கல்வி, இப்படி நூற்றுக்கணக்கான சிறப்புத் திட்டங்களை வரிசைப்படுத்தி கொண்டே போகும் அளவிற்கு தமிழ்நாடு மக்களின் வாழ்வில் விடியலை உருவாக்கும் ஆட்சி திராவிட மாடல் ஆட்சி.

தி.மு.க. செல்வாக்கு உயர்வு!

அதனால்தான் அண்மையில் 'இந்தியா டுடே' மற்றும் 'சி ஓட்டர்ஸ்' அமைப்பினர் நடத்தியக் கருத்துக்கணிப்பில் கடந்தாண்டு தி.மு.கழகத்திற்கு இருந்த மக்கள் செல்வாக்கு 47 சதவிகித்திலிருந்து 52 சதவிகிதமாக உயர்ந்திருப்பதாகவும், இப்போது மட்டுமல்ல, எப்போதும் தேர்தல் நடைபெற்றாலும் தமிழ்நாட்டில் 39 தொகுதிகளிலும், தி.மு.கழகம் அமோக வெற்றி பெறும் என்றும், Most Popular CM in Home State எனும் தலைப்பில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் கடந்தாண்டு பிப்ரவரி திங்களில் 36 சதவிகிதமாக இருந்த மக்கள் செல்வாக்கு, இந்தாண்டு பிப்ரவரி திங்களில் 57 சதவிகிதமாக உயர்ந்து, இந்தியாவின் மிகப்பெரிய மாநிலங்களில் முதலிடத்தில் தமிழ்நாட்டின் முதல்வர் இடம்பெற்றிருப்பது விஞ்ஞானப்பூர்வமாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள முடியாத அரசியல் அரவேக்காடு அண்ணாமலை அவர்கள் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் ஒருமையில் பேசுவது அரசியல் அநாகரிகத்தின் உச்சமாகும்.

நீட், புதிய கல்விக் கொள்கை, இந்தி திணிப்பு, மாநில உரிமைகளுக்கு எதிராக செயல்படுவது என அனைத்திலும், தமிழக மக்கள் விரோத அரசியல் செய்யும் அண்ணாமலை தொடர்ந்து செய்யும் கேலிக்கூத்து நடவடிக்கைகளுக்கு அளவின்றி போய்கொண்டிருக்கிறது. திடீரென்று செருப்பில்லாமல் நடப்பேன் என்று சொல்லி Shoe கால்களுடன் வலம் வருவது, தன்னைத்தானே சாட்டையால் அடித்துக்கொள்வது போன்ற நடவடிக்கைகள் கண்டு நாடே எள்ளி நகையாடுகிறது.

கார்ப்பரேட்களுக்கும், ஆதிக்க சக்திகளுக்கும் ஆதரவாக அரசியல் செய்யும் அண்ணாமலைக்கு திராவிட மாடலைப் பற்றியும், முதலமைச்சர் அவர்களை பற்றியும், துணை முதலமைச்சர் அவர்களை பற்றியும் பேசுவதற்கு எந்தவிதமான தகுதியும், அருகதையும் இல்லை.

அண்ணாமலையின் தற்குறித்தனம்!

துணை முதல்வர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் போன்ற அமைச்சர் பெருந்தகைகளை 'தற்குறி' என்று சொல்லுமளவுக்கு, கீழ்த்தரமாகவும், தற்குறித்தனமாகவும் செயல்படும் அண்ணாமலை நிலைக் கண்ணாடி முன்நின்றால் தன்னுடைய தற்குறித்தனங்கள் ஒவ்வொன்றாய் வரிசைக்கட்டி நிற்கும்.

நாவடக்கம் அற்றவர், அநாகரிகமானவர் என்பதை இடைவெளியில்லாமல் தொடர்ந்து நிரூபித்துக்கொண்டிருக்கிற அண்ணாமலை ஒவ்வொரு நாளும் தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் அம்பலப்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பது நிதர்சனம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் காட்டமாக பதில் அளித்துள்ளார்.

ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் அருகே ஆசர்கானா பகுதியில் உள்ள சுரங்கப்பாதை யில் மக்கள் போக்கு வரத்திற்கு இருசக்கர வாகனங்கள் செல்லும் வகையில் பணிகள் நடைபெறுகின்றன. அந்தப் பாதையை நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் ஆகியோர் ஆய்வு செய்தனர். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன் மற்றும் வட்ட செயலாளர்கள் உள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இராமநாதபுரம், பிப். 22 -

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (22.02.2025 - சனிக்கிழமை) பிற்பகல் 3.30 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்திய மூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பால்வளத்துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக்குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் மற்றும் தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர் ,பரமக்குடி தொகுதி பார்வையாளர். மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண், திருவாடனை தொகுதி பார்வையாளர். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் எஸ்.சுதர்சன் இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர், விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல்முருகன் முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில,

மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர் புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள். கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1 முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம்.

பூத் கமிட்டி சரிபார்த்தல் கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.